தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயியரு	மலர்
சஅ	ஆனந்த, ஆவணி (1974 — ஆகஸ்டு — செப்டம்பர்)	ரு

தமிழர் என்பது என்றோ? எவ்வாறோ?

அ. வைத்திலிங்கம்,
மண்டபம் முகாம்.

இனியசெந் தமிழ்மொழியில் பிள்ளைகளின் பேரும்
இல்லங்கள் கலைக்கூடம் அலுவலகம் மற்றும்
தனியாக உள்ளதொரு தெருவேனும் தமிழில்
தகும்பேரே திகழ்ந்திடுக! தமிழ்நாட்டில் இஃதே
நனிசால்பு! நமக்கில்லை பிறமொழியின் காழ்ப்பு!
நந்தாயை நாம்போற்றல் நஞ்சுண்ணும் நிலையோ?
பனிக்கின்ற கண்ணீரால் பைந்தமிழும் அழுவாள்:
பாவிகளே நீர்தமிழர் என்பதும்எவ் வாறே?

தாமரையே மல்லிகையே முல்லைமலர் என்றோ
தாயப்பன் அருளப்பன் இளங்கோவன் என்றோ
பாமரரும் பைந்தமிழில் பேர்தன்னைச் சூட்ட,
பலகற்ற சான்றோரே வழிகாட்டல் இன்றித்
தேமதுரத் தமிழ்விட்டுத் திரையினிலே தோன்றும்
சீர்கெட்டோர் பெயர்சூட்டி அழிவீர்கள் என்றால்
நாமுமக்கிங் குரைப்பதெலாம் ஒன்றேதான் நும்மை,
நாயென்றும் பேயென்றும் நவிலல்மிகச் சாலும்!,

ஊருக்குத் தேவாரம் செந்தமிழிற் பேரை
உரைப்பதனை மறந்தீர்கள் உணர்வழிந்து நீவிர்
யாருக்கு வேண்டுமிந்தப் பேர்மாற்றம் என்றே
எப்பேரால் அழைத்திடினும் அழைத்திடுக என்றீர்
பாருக்குள் இக்கொடுமை வேறெங்கும் இல்லை
பைந்தமிழின் ஊர்ப்பெயரை வடமொழியில் மாற்றிப்
பேருக்கங் கேற்றபடி பொய்க்கதையை ஆக்கிப்
புராணங்கள் தலப்பெருமை என்பதுவோ உண்மை?

செந்தமிழே தேவர்க்கு விருப்பான ஒன்றும்!
செந்தமிழே நாம்வழங்கும் தாய்மொழியாம் அன்றோ?
செந்தமிழில் வழிபாடு செய்யாமல் வேறே
செத்தமொழி வழிபாடு செய்பவனு தமிழன்?
செந்தமிழை வேண்டாயேல் தெருநாயே ஓடு
திகழ்பஞ்சு மெத்தையிலா சீச்சீகண் பாடு!
செந்தமிழர் நீர்வருக! நீர்தமிழர் என்றே
செந்தமிழ்நன் னாட்டினிலே திகழ்ந்திடுதல் என்றோ?

தமிழன்பர்கட்கோர் அமிழ்தான வாய்ப்பு

தலைவர், மாணவர் தோ்வகம்,

ஆரணி, வடஆர்க்காடு மாவட்டம், (632301)

தனித்தமிழ் வளர்ச்சிக்கும் — ஆக்கத்திற்கும் பணியாற்றும் நிலையான நிறுவனம் ஒன்று தொடங்கப்பெற்றுள்ளது அந் நிறுவனத்தின் அறிக்கையை அறிந்துகொள்ள கீழ்க்குறிக்கப் பெற்றுள்ள விளக்கங்களைத் தந்து தொடர்புகொள்க.

1. தங்களின் பெயரும், முகவரியும்:
2. தங்களுக்குத் தெரிந்த தனித் தமிழ்ப் பற்றுளர்களின் பெயர்களும், முகவரிகளும்:

தொல்காப்பியரின் மாட்டு

டாக்டர் சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம் லிட். பிஎச் டி.
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

முன் இதழ் தொடர்ச்சி.

8. அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப் பெயர்களின் மாட்டு:

ஒன்று முதல் ஒன்பான்களின் முன் பத்துவரின் நிலைமொழி பெறும் பல்வேறு திரிபுகளை விளக்கிய ஆசிரியர் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் வருமொழியாக வரினும் அத்திரிபுகளையே அந்நிலைமொழிகள் பெறும் எனப் பொது நிலையில் மாட்டெறிந்தார்

'அளந்தறி கிளவியும் நிறையென் கிளவியும்
கிளந்த இயல தோன்றுங் காலை' நூ. 446

(எடு) ஒருகலம் இருகலம்; ஒருகழஞ்சு, இருகழஞ்சு.

இவ்வெண்ணுப் பெயரின் மூன் நூறு வரினும் இத்தன்மையில்தான் புணரும்.

'நூறுமுன் வரினும் கூறிய இயல்பே' நூ. 460

(எ—டு) ஒரு நூறு. இருநூறு முதலியன. 'இவை மாட்டேற்றான் முடிந்தன. மாட்டேறு ஒவ்வாதன மேற்கூறி முடிப்ப' என நச்சினார்க்கினியர் நவிறல் காண்க. ஒருபது முதலியவற்றின் முன் ஆயிரம் வரின் இன் சாரியை பெறும் என்றார்.

'ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயி னொற்றிடை மிகுத லில்லை' — நூ. 476

(எ—டு) ஒருபதினாயிரம், இருபதினாயிரம்.

அளவுப் பெயரும் நிறைப் பெயரும் வருமொழியாக வரின் இத்தன்மையில் இன் சாரியை பெறுமென மாட்டெறிந்தார்.

அளவும் நிறையும் ஆயியல் திரியா' — 477

(எ—டு) ஒருபதின்கலம், ஒருபதின்கழஞ்சு முதலியன.

இங்ஙனம் வரும் மாட்டேறுகள் இன்னுஞ் சிலவுள. விரிவஞ்சி விடுத்தேம்.

9. உருபியலுடன் மாட்டெறிதல்

உருபியலில் ஆசிரியர் உயிரீறு, புள்ளியீறு, குற்றியலுகர ஈற்றுப் பெயர்கள் இன்னின்னவாறு வேற்றுமை உருபுடன் புணருமெனத் தெளிவுறுத்தினர் (Declension of nouns)

(1) பல்லவை நுதலிய அகர இறுபெயர் வற்றுச் சாரியை பெறும் (174).

(2) நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகி னகரம் பெறும் (179).

(3) சுட்டுச் சொற்களில் உகர ஈறு 'அன்' சாரியையும், ஐகார ஈறும் வகர ஈறும் வற்றுச் சாரியையும் (176, 177, 183) பெறும். சுட்டு முதலாகிய ஆய்த இறுதி ஆய்தம் கெட்டு அன் சாரியை பெறும் (200).

(4) படர்க்கை, முன்னிலைப் பெயர்களாகிய எல்லாரும், எல்லீரும், என்பன முறையே எல்லார் எல்லீர் என நின்று தம், நம் சாரியைகளை எய்தி இறுதியில் முற்றும்மை பெற்று முடியும் (நூ. 191).

(5) தொடக்கங் குறுகும் பெயர்களாகிய தாம், நாம், யாம், தான், யான் என்பன நெடுமுதல் குறுகியும் யகரம் எகரமாகத் திரிந்தும் புணரும் (188, 192).

(6) எல்லாம் என்ற சொல் அஃறிணையாயின் வற்றுச் சாரியையும், உயர்திணையாயின் நம்முச் சாரியையும் எய்தி முடியும் (189, 190)

(7) யாது என்ற வினுப் பெயர் அன் சாரியை பெறும் (200).

(8) ஓகார ஈற்றுப் பெயர் ஒன் சாரியை பெறும் (180).

(9) 'ஏழ்' என்ற சொல்லும் குற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர்களும் 'அன்' சாரியை பெறும் (194, 198).

'ஏழன் இறுதி' எனத் தொல்காப்பியர் உடம்பொடு புணர்த்துக் கூறுதல் காண்க (194).

மேல்வரும் அகத்தோத்துக்களில் இச்சொற்களே வேற்றுமைப் பொருட் புணர்ச்சியின் கண்ணும் இச் சாரியைகளே

பெறும் என உருபியலுடன் மாட்டெறிந்து காட்டினர், அம் மாட்டு நூற்பாக்களை இவண் தொகுத்துக் காண்போம்.

1. பலவற் றிறுதி உருபியல் நிலையும் நூ. 220
2. நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும் நூ. 253
3 சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும் நூ. 263
4. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும் நூ. 281
5. உருபியல் நிலையும் மொழியுமா றுளவே நூ. 291
6. படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும் வேற்றுமையாயின் உருபியல் நிலையும் நூ. 320
7. அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும் எல்லாம் எனும்பெயர் உருபியல் நிலையும் நூ. 322
8. உயர்திணையாயின் உருபியல் நிலையும் நூ. 324
9. தான்யான் எனும் பெயர் உருபியல் நிலையும் நூ. 352
10. சுட்டுமுதலாகிய வகர இறுதி முற்படக் கிளந்த உருபியல் நிலையும் நூ. 378
11. ஏழென் கிளவி உருபியல் நிலையும் நூ. 388
12. எண்ணுப் பெயர்க் கிளவி உருபியல் நிலையும் நூ. 419
13. யாதென் இறுதியுஞ் சுட்டுமுதலாகிய ஆய்த இறுதியும் உருபியல் நிலையும் நூ. 422

இந்நூற்பாக்களான் உருபு புணர்ச்சிக்கு ஓதிய சாரியைகளே பொருட் புணர்ச்சிக்கும் பொருந்தும் என்பது போதரும்.

10. அல்வழி இயல்பில் வேற்றுமை முடியுமெனல்

அல்வழிப் புணர்ச்சியில் அகர ஈற்றுப் பெயர்கள் வன் கணத்தின் முன் வல்லெழுத்து மிக்கு முடியும் என உயிர்மயங் கியலின் தலை நூற்பாவில் விதித்தார்.

'அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை அல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே'

பின்னர் அ, ஆ, ஈ, உ, ஊ, ஏ, ஒ எனும் ஏழு ஈற்றுப் பெயர் களும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியிலும் அங்ஙனமே மிக்கு

முடிதலை, 'வேற்றுமைக் கண்ணும் அதனோரற்றே' (216. 225 252, 259, 266, 276. 292) என ஈறுகள் தோறும் எடுத்தோதி மாட்டெறிந்து காட்டினார்.

(எ-டு) இருவிளக் கொற்றன், மூங்காக்கால். ஈக்கால், கடுக்காய், கழூஉக்கடுமை, ஏக்கடுமை, ஓக்கடுமை.

தொகைமரபில் ணகர, னகர, ஈற்றுப்பெயர்கள் அல்வழி யில் எல்லாக் கணத்து முன்னும் இயல்பாக முடியும் என விதித்தார்.

'மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழி; நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே (147)

வேற்றுமைப்புணர்ச்சியில் வன்கணம் அல்லாக் கணங்களின் முன்னரும் இவ்வீறுகள் இங்ஙனமே இயல்பாக முடியும் என மாட்டெறிந்தார்.

'வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூறியற்கை ஆவயி னான' (148)

11. வேற்றுமை இயல்பில் அல்வழி முடியுமெனல்

(அ) லகர ஈற்றுப் பெயர்கள் னகர ஈறுபோல் பொருட் புணர்ச்சியில் றகரமாகத் திரியும் என்றார். அல்வழியின் கண்ணும் அங்ஙனமே முடிதலை,

'நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல' (371)

என இயம்பினார்.

(எ-டு) நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது.

(ஆ) எண் என்ற உணவுப் பெயர் அல்வழியின்கண் வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த திரிபினைப் பெறுமென மாட்டெறிந்தார்.

'வேற்றுமை அல்வழி எண்ணென் உணவுப்பெயர்
வேற்றுமை இயற்கை நிலையலு முரித்தே' நூ 308

(எ-டு) எட்கடிது, எட்சிறிது.

(இ) மகர ஈறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுதல் போல இவ்வீற்று எண்ணுப்பெயர் முன் அளவுப் பெயரும் நிறைப்பெயரும் வரின் மிக்கு முடியும் என மாட்டெறிந்தார்.

'அளவும் நிறையும் வேற்றுமை இயல' (319)

'வேற்றுமை இயல' எனவே, 'தாம் வேற்றுமை அல்லவாயின' என நச்சினார்க்கினியர் நவிலுதல் காண்க.

(எ-டு) ஆயிரக்கலம், ஆயிரக்கழஞ்சு.

12. சுட்டிடைச் சொற்களின் மாட்டேறு

அகர ஈற்றுச் சுட்டிடைச் சொல் வன்கணத்தின்முன் வல்லொலி மிக்கும், மென்கணத்தின் முன் மெல்லொலி மிக்கும், ஏனைக் கணங்களின் முன் வகரம் பெற்றும், செய்யுளில் நீண்டும் முடியும் என வரையறுத்தார் (204 - 208). இவ்வியல்பில்தான் இகர உகரச் சுட்டிடைச் சொற்களும் முடியுமென,

'சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே' (238)
'சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும்' (255)
'ஏனவை வரினே மேனிலை இயல' (256)

என வரும் மாட்டேற்று நூற்பாக்களில் இயம்பினார்.

13. சொல்வரம்பு குறித்த மாட்டு

(1) சு, இரு சொற்களின் இறுதியில் வருமென்றார்.
உசு, முசு (நூ. 75).
இங்ஙனமே -ந் இரு சொற்களின் இறுதியில் வரும் என மாட்டெறிந்தார்.
'உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்' (நூ. 79)

(2) -பு ஒரு சொல்லில் தான் இறுதியில் வரும். -ஞவும் அங்ஙனமே வரும்.
'உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே'
'தபு' போல 'உரிஞ்' வரும். ஆனல் இருபொருள் பயவாது,

14. ஒருபுடை மாட்டேறு அல்லது பகுதி மாட்டேறு

ஒருபுடை ஒத்து வரும் விதிகளை மாத்திரம் தழுவும் வகையில் பல மாட்டு நூற்பாக்களைத் தொல்காப்பியர் அமைத்துள்ளார் அவற்றுள் சிலவற்றை இவண் காண்போம்.

(1) கதநபம எனும் ஆவைந்தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே.
சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ எனும் மூன்றலங் கடையே (நூ. 62)

(2) என வருமுயிர் மெய்யீருகாது'
'ஔவும் அற்றே நவ்வலங் கடையே' (நூ. 72)

(3) உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டாகும்மே.
உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டா திவணை யான (80)

(4) அவற்றுள்
அஆ ஆயிரண் டங்காந் தியலும்,
இஈஎஏ ஐயென இசைக்கும்
அப்பா லைந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய (86)

15. இருவகைப் புணர்ச்சிக்கும் மாட்டேறு

முரண் என்னுந் தொழிற்பெயர் தொகைமரபில் கூறியபடி அல்வழியில் இயல் பாயும் (147) புள்ளி மயங்கியலில் கூறியபடி வேற்றுமையில் திரிந்தும் (302) முடியும் என மாட்டெறிந்தார்.

'முரணென் தொழிற்பெயர் முதலியல் நிலையும்' (309)

(எ-டு) முரண் கடிது, முரட்கடுமை.

இதுகாறும் எழுதியவாற்றான் தொல்காப்பியர் எழுத்திலக் கணம் முழுவதிலும் ஆங்காங்கே மாட்டு நூற்பாக்களை யமைத்து இலக்கண விதிகளைச் சுவை நலம் கெழுமவும், நினைவில் நிற்கவும் ஏற்ற வகையில் இயற்றியுள்ளார் என்ற உண்மை வெள்ளிடைமலையென விளங்கக் காணலாம்.

புரட்சிக்கவிஞரின் குறுந்தொகைச் செல்வங்கள்

இராம. சுப்பிரமணியன், எம். ஏ., பி. லிப்.,
நூலகர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.
அடையாறு, சென்னை - 20.

குறுந்தொகை எட்டுத் தொகையுள் ஒன்று. நல்ல குறுந்தொகை என்று சிறப்பித்துக் கூறப்படும் இதில் நான்கடி முதல் எட்டடி வரையில் அமைந்த நானூறு அகப்பொருட் பாட்டுக்களை உடையது உரையாசிரியர்களால் மிகுதியாக மேற்கோள் காட்டி எடுத்தாளப்பெற்ற சங்க நூல் இதுவே ஆகும்.

காதலர் வாழ்க்கையின் பல சிறந்த நுட்பங்களை இந்நூலில் காணலாம். உள்ளத்துணர்வு சிறந்த ஓவியங்களாக அமைத்துக் காட்டப்பட்டுள்ள பாட்டுக்கள் பல இதில் உள்ளன. முதல் கருப்பொருள்களாக அமைந்த இயற்கை, அழகாகப் பாடப்பட்டுள்ளது. பறவை, விலங்குகளின் வாழ்க்கையைப் பின்னணியாக அமைந்த பாட்டுக்கள் சிறப்பாக அமைந்துள்ளன; நயம் மிக்க உவமைகள் பற்பல இதில் உள்ளன.

பழங்கால மக்களின் பழக்க வழக்கங்கள், நாகரிகம் முதலியன குறுந்தொகையில் காணலாம்: குறுநில மன்னர் பலரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களும் கிடைக்கின்றன.

பிரிவுத் துன்பம்

சங்க இலக்கியத்தில் இருத்தல் நிமித்தமாம் முல்லைத் திணை காதலர் ஏக்கங்களைக் காட்டுகின்றது. பிரிந்திருந்த முல்லை நிலக் காதலர்கள் மாலையையும் இரவையும் வெறுப்பதில் பொருள் உண்டன்றோ! பிரிவுத் துன்பம் மிக்க தலைவியின் ஆற்றாமையை ஓரம்போகியார் ஒரு பாடலில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

> வந்தன்று வாழியோ மாலை
> ஒருதா னன்றே கங்குலு முடைத்தே [1]

என்று அவள் மாலைமட்டுமில்லை. இனி இரவும் இருக்கிறதே எனப் பிரிவுத் துன்பத்தை வெளியிடுகின்றாள்.

1 குறுந். 122. ஓரம்போகியார்.

பாவேந்தரின் பாடல்களிலும் இதுபோன்ற காட்சிகளைக் காணமுடிகின்றது. வருகிறேன் என்று கூறிய தலைவி வராத நிலையில் தலைவன் காத்து நிற்கும் தன்மையையும், அவன் மாலையின்மேல் வெறுப்புக் கொள்வதையும் சிறப்பாகக் காட்டுகின்றார்.

முல்லையிலே சிரித்தபடி தென்றலிலே சொக்கி
முன்னடியும் பெயர்க்காமல் இன்னும் இருக்கின்ற
பொல்லாத மாலைக்குப் போக்கிடமோ இல்லை. [2]

தலைவன் கூற்று

வேந்தனிட்ட வேலையை மேற்கொண்டு செல்லும் தலைவன், தன் தேர்ப்பாகனை நோக்கி, 'இன்று விரைந்து சென்று அரசன் இட்ட வேலையை முடித்து நாளைக்கே தலைவியின் இல்லத்தை அடையவேண்டும்; தேரை விரைவாக நடத்து' என்று கூறுகிறான்.

தேர் விரைந்து ஓடிவருவது. குன்றிலிருந்து இறங்கிவரும் அருவிபோல் உள்ளது. தேரின் சக்கரம் ஒளிவிட்டு விளங்குதல், இளம் பிறைபோல் உள்ளது. அச் சக்கரம் வழியில் உள்ள பசும் பயிரைத் துணித்துச் செல்லும்போது வானத்திலிருந்து விழும் எரிநட்சத்திரம்போல் உள்ளது. தேரின் வேகம் காற்றின் வேகம்போல் உள்ளது.

இன்றே சென்று வருதும்; நாளைக்
குன்றுஇழி அருவியின் வெண்தேர் முடுக,
இளம்பிறை அன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியின் பைம்பயிர் துமிப்பக்
கால்இயல் செலவின் மாலை எய்தி
பல்மாண் ஆகம் மணந்து உவக்குமே. [3]

இந்தக் கருத்தினையே மையமாகக் கொண்டு சிறந்த கருத்துரைப் பாட்டாக வழங்குகின்றார் கவிஞர்:

நாமின்று சென்று நாளையே வருவோம்;
வீழும் அருவிபோல் விரைந்துதேர் நடத்துவாய்;
இளம்பிறை போல்அதன் விளக்கொளி உருளை

---

2 காதல் நினைவுகள். பக். 14.
3 குறுந். 189. மதுரை ஈழத்துப் பூதன் தேவன்.

விண்வீழ் கொள்ளிபோல் வினை நிலம் படியக்
காற்றைப் போலக் கடிது மீள்வோம்;
வளையல் நிறைந்த கையுடை
இளையளை மாண்புற யான்மணந் துவக்கவே [4]

என்று அழகாகச் சித்தரிக்கின்றார்

சூடுபட்ட பூனை

பிடிக்க வந்த நாரைக்கு அகப்படாமல் நீரில் மூழ்கித் தப்பியது கெண்டைமீன். பிறகு அது வெளிவந்தபோது அதன் கண்ணெதிரில் பட்ட வெண்ணிறத் தாமரை அரும்பின் உருவம் நாரைபோல் தோன்ற, அந்த அரும்பையும் கண்டு அஞ்சுகிறது,

குருகுகொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வான்முகை வெரூஉம் [5]

இக்கருத்தினை மனத்தில் வைத்துக்கொண்டே கவிஞர் அழகின் சிரிப்பில் ஒரு அழகான காட்சியைப் படைத்துக் காட்டுகின்றார்.

ஆலமரக் கிளையில் தொங்கிய பாம்பை விழுதென்று தவறாக நினைத்துக்கொண்டு தொட்டுவிட்டு மருண்ட குரங்கை விளக்கிக் காட்டுகிறார் கவிஞர். ஆலமரத்தில் பல விழுதுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுடன் ஒரு பாம்பும் தொங்கிக் கொண்டிருக்கிறது. விழுதைப் பிடிப்பதற்கு மாறாக விழுது போல் காட்சியளிக்கும் பாம்பைத் தொடுகின்றது குரங்கு. தொட்டவுடன் சுடர்விட்டு எரியும் விளக்கைத் தொட்ட குழந்தையைப்போல் வெடுக்கென்று குதிக்கின்றது கீழேயுள்ள விழுதுகள் எல்லாம் பாம்புகளாகத் தோன்றுகின்றன. உச்சி மரத்துக்குப் போய்விட்டது, இறுதியாகத் தன் வாலைப் பார்க்கிறது. இதுவும் பாம்போ என்று நினைக்கின்றது. விழுதைக் காணும்போதெல்லாம் அஞ்சுகிறது.

கிளையினிற் பாம்பு தொங்க
    விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
    வெடுக்கெனக் குதித்த தைப்போல்

---

4 பாரதிதாசன் கவிதைகள்-2. பக். 65,

5 குறுந். 127, ஓரம்போகியார்.

கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும 6

கேளாத பேச்சு

வாடைக் காற்று, மழை, ஆறு, கடல், தும்பி, முல்லைக் கொடி முதலியவற்றை நோக்கித் தலைவன் முதலானோர் விளித்துக் கூறும் பாட்டுக்கள் சில குறுந்தொகையுள் உள்ளன. பேசாத இப்பொருள்களை நோக்கிப் பேச்சு நிகழ்கின்றது. மனித உணர்ச்சி அற்ற இவைகள் இங்கு உள்ள கற்பனையில் அத்தகைய உணர்ச்சி உடையவைகளாக விளங்குகின்றன

தலைவி மழையை நோக்கிப் பின்வருமாறு கூறுகிருள்.

"கடிய வேகத்தை உடைய இடியின் அதிரும் குரலுடன் பொருந்திக் காற்ருேடு வந்த நிறைந்த சூல்கொண்ட பெரு மழையே! உனக்குக் கருணை இல்லையோ? பெரும் புகழ் உடைய இமய மலையையும் அசைக்கவல்ல ஆற்றலோடு இருக்கிருய். யாங்களோ துணையில்லாதவர்கள்; இரங்கத் தக்கவர்கள்; பெண்கள், எங்களிடத்தில் இத்தகைய கடுமை ஏனோ"

கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை!
ஆரளி இலையோ? நீயே பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணையிலர் அளியர் பெண்டிர்இஃது எவனே? 7

என்ற குறுந்தொகைப் பாடலைப் படிக்கும்போது கவிஞரின் தென்றல்தான் நம் நினைவுக்கு வருகின்றது.

திண்குன்றைத் தூள்தூளாகச்
செய்யினும் செய்வாய், நீஓர்
துண்துளி அனிச்சம் பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்! 8

---

6 அழகின் சிரிப்பு: பக். 36.
7 குறுந். 158 ஔவையார்.
8 அழகின் சிரிப்பு: பக். 10

தலைவனை நினைத்துத் தான் துயிலாதிருத்தலைத் தோழிக்குத் தலைவி கூறியது.

என்னுடைய கண்கள் ஆரவாரத்தையுடைய இடியேற்றோடே முகில் மழை பெய்து கலந்த முல்லை நிலத்தனவாகிய முல்லையினது மெல்லிய கொடி, பற்கள் போன்று அரும்பா நிற்கும் நாட்டையுடைய தலைவன் பொருட்டு, உறங்குதலை ஒழிந்தன என்று கார்ப்பருவம் வந்தும் இன்னும் வாராமல் இருக்கும் நிலையினை நினைந்து கூறியது ஆகும்.

ஆர்கலி யேற்றோடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறென முகையு நாடற்குத்
துயிறுறந் தனவாற் றோழியெங் கண்ணே. [9]

கார்ப் பருவம் தொடங்கிவிட்டது. தலைவன் வினைமுடித்து திரும்பி வருவதாகக் குறித்துச் சென்ற பருவம் வந்தபின்னரும் வரவில்லையே என்று தலைவி கவலையுடன் ஏங்கி நிற்கின்றாள். அவள் அதனை நினைந்து இப்பேதைத் தலைவியின் கண்கள் துயில் துறந்தன என்ற கருத்தினை மையமாகக் கொண்ட இலக்கிய நயம்மிக்க பாடலாக அமைத்திருக்கின்றார் கவிஞர்.

ஆர்ப்புறும் இடிசேர் கார்ப்பரு வத்தைக்
கொல்லையின் மணந்த முல்லைக் கொடியின்
சிரிப்பென அரும்பு விரிக்கும் நாடனை
எண்ணித் துயில்நீங் கியஎன்
கண்கள் இரண்டையும் காண்பாய் தோழியே! [10]

காதல் தந்த ஆற்றல்

திருமணம் செய்து இல்வாழ்க்கை தொடங்கிய ஒரு குடும்பத்தில் மனைவி தயிர்குழம்பு சமைத்தாள். முற்றிய தயிரைத் தன் மெல்லிய விரலால் பிசைந்தாள்; சேர்ப்பன சேர்த்துத் தாளிக்கத் தொடங்கினாள். குறித்த நேரத்தில் விரைந்து தாளிக்கத் தவறினால் நறுமணமும் சுவையும் குன்றுமாதலின் தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே நெகிழ்ந்த தன் ஆடையை உடுத்திக் கொண்டாள். உடனே தாளிக்கத் தொடங்கினாள். தாளிப்புப்புகை மேல் எழுந்து கண்ணில் பட்டது. புகைக்காகத்

9 குறுந். 186 — ஒக்கூர் மாசாத்தியார்
10 பாரதிதாசன் கவிதைகள் 2, பக். 66

தயங்கிச் சிறிது பொறுத்தாலும் சுவை பயன் கெடும் என்று அஞ்சி, புகைக்கு இடையே உற்று நோக்கித் துழாவிச் சமைத்து முடித்தாள். இவ்வாறு சமைத்த இனிய புளிச்சுவை உடைய குழம்பைக் கணவனுக்கு இட்டபோது அவன் 'நன்றாயிருக் கின்றது' என்று பாராட்டியவாறே உண்டான். அந்தப் பாராட்டுதலைக் கேட்ட மனைவியின் முகம் மகிழ்ச்சி யுற்றது. அகத்தே நிறைந்த மகிழ்ச்சி புறத்தே நுட்பமாகப் புன்முறுவ லாக விளங்கியது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே [11]

பாரதிதாசன் அவர்களின் குடும்ப விளக்கின் தலைவி காலை நான்கு மணிக்கே எழுந்து, காலைக் கடன்களை முடித்து, குழந் தைகளைக் குளிக்கச் செய்து, கொண்டவன் மகிழப் பேணி வாழ்கின்றாள் அவளுக்கு அருமைப் பரிசு நல்குவான் போலே கதிர்க் கைகளை நீட்டி ஒளி வழங்கினான் கதிரவன் குழந்தை களுக்குச் சீருடை அணிவித்துச் சீரோடு பள்ளிக்கு அனுப்பி வைத்தாள் அப்பெண்கொடி. அதனையடுத்துத் தன் கணவ னுக்கு வேண்டிய பணிவிடை செய்து முடித்தாள். அனைவரும் சென்ற பின்னரே அவள் காலை உணவு உண்டாள். கணக் காய்க் காய்கள் வாங்கி வந்தாள். மதிய உணவு சமைக்க முற்படுகின்றாள் இத்தலைவி. இந்நேரம் பழைய குறுந்தொகைத் தலைவி நம் நினைவில் வந்து நிற்கின்றாள்.

குடும்ப விளக்கின் சுடரொளியாய்த் துலங்கும் மங்கை நல் லாள், சமையலின் புதுமை தேர்ந்து தெளிந்தவள். தம் இல் லத்திற்கு வரும் விருந்தினரிடம் கலந்து பேசும் போது

சமையலில் புதுமை வேண்டும்!
சமையல்நூல் வளர்ச்சி வேண்டும்!
சமையற்குக் "கல்வி இல்லம்"
அமைந்திட வேண்டும் யாண்டும்!
அமைவிலாக் குடும்பத் துள்ளும்
அகத்தினில் மகிழ்ச்சி வேண்டில்
சமையலில் திறமை வேண்டும்
சாக்காடும் தலைகாட் டாதே. [12]

எனப் பேசி மகிழும் இனியள்!

---

11 குறுந் 167, கூடலூர் கிழார்.

கூடலூர் கிழார் காட்டிய குறுந்தொகைத் தலைவியைப் போலவே, பாவேந்தர் பாரதிதாசனாரின் தலைவி,

பொருளையும் பெரிதென் றெண்ணாள் ;
பூண்வேண்டாள் ; தனைம ணந்தோன்
அருளையே உயிரென் றெண்ணும்
அன்பினால், வருத்தி றக்கும்
உருளைநற் கிழங்கில் தன்னை
உடையானுக் கிருக்கும் ஆசைத்
திருவுளம் எண்ணி எண்ணிச்
செவ்விள நகைசெய் கின்றாள். [13]

என்று விளங்குகின்றாள். இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னர் விளங்கிய சங்கத் தலைவியின் இல்லற நெறியை, இக்கலைக் குடும்ப விளக்குத் தலைவியிடமும் காண முடிகின்றது. இவ் வொப்புமையைக் காணும்போது கொள்ளை இன்பம் ஏற்படுகின்றது.

இயற்கையுடன் இயற்கை

இயற்கைப் பொருள்களை இயற்கைப் பொருள்களோடு ஒப்பிட்டு விளக்கும் பகுதிகள், குறுந்தொகையில் அழகுற அமைந்துள்ளன. இயற்கையின் இருவேறு காட்சிகளைக் காட்டி, அவற்றுள் ஒப்புமை நிலவுதலைப் புலவர் விளக்குகின்றனர்.

மயிலின் அடியின்கண் அமைந்த விரல்களும் உள்ளங் காலும் போன்றமைந்த இலைகளையுடையது நொச்சி நொச்சி யின் பூங்கொத்து, கரு நிறமானது.

மயில்அடி இலைய மாக்குரல் நொச்சி [14]

இவ்வடிகளைக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

ஆடும் பறவைநின் னடிகள் இரண்டும்
ஈர நொச்சியின் இலைகளே யாகும்

என்று கையாண்டுள்ளார்.

பாவேந்தர் தொட்ட இடமெல்லாம் குறுந்தொகைப் பாடல் களின் கருத்துக்களையும் உவம உருவகங்களையும் கையாள்கின் றார். கவிஞரின் பாடல்களில் குறுந்தொகைச் செல்வங்களைக் காணுகின்றோம்.

---

12 குடும்ப விளக்கு பக். 77
13 குடும்ப விளக்கு பக். 19
14 குறுந் 138 கொல்லன் அழிசி.

வாழும் இலக்கியம்

சோ. சண்முகானந்தம், எம் ஏ.,
முதல்வர்
கனகசபைப் பிள்ளை தமிழ்க் கல்லூரி,
நாகப்பட்டினம்.

கலைவடிவம் தரப்பட்ட சுயசிந்தனையின் வெளிப்பாடு அத்தனையும் இலக்கியமே. ஆயினும் இலக்கியத்தின் நிலை பேற்றுத் தன்மை பல்வேறு காரணங்களைப் பொறுத்து அமைகிறது.

இலக்கியத்தின் வாழுந்தன்மை என்பது அது மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கைக் குறிக்கிறதேயன்றி அது ஆக்கப்பட்ட நூல்களுள் ஒன்றாக "ஆவணக் காப்பகத்தில்" வாழுந் தன்மையைக் குறிக்கவில்லை.

தமிழில் பன்னூறு பழைய நூல்கள் இருப்பினும் திருக்குறளும், சிலம்பும், கம்பராமாயணமுமே மக்களிடம் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இத்தகையவற்றையே வாழும் இலக்கியம் என்கிறோம்.

எழுதப்பட்ட இலக்கியங்கள் அத்தனையும் செல்வாக்குப் பெற்றிடுவதில்லை. ஆகவே இலக்கியத்தின் வாழுந்தன்மையை நிர்ணயிப்பவை யாவை என்பது நீண்ட ஆய்வுக்குரியது.

வடிவமும் கருத்தும்

இலக்கியத்திற்குக் கருத்தும், வடிவமும் உயிரும், உடலும் போல. அதனை உருவம் உள்ளடக்கம் (Form & content) என்ற சொற்களாலும் குறிப்பர். கவிதையை மட்டும் மனத்தில் கொண்டு பேசுவோர் கருத்தும் கற்பனையும் என்றும் பேசுவர்.

உள்ளடக்கமில்லாத இலக்கியம் ஒன்று இருக்கவேமுடியாது. ஆனால் வடிவமைதி இல்லாத இலக்கியங்கள் தோன்றக்கூடும்.

இலக்கியத்தின் உள்ளடக்கம் என்பது அதனை ஆக்கியோன் உலகுக்குக் கூற விரும்பும் செய்தி (Message).

வடிவமைதி என்பது உவமை, உருவகம், ஓசை இன்பம் முதலிய அழகுகள்.

உள்ளடக்கம் அறிவைத் தொடுவது; உருவம் உணர்வைத் தூண்டுவது.

இலக்கியத்தின் உள்ளடக்கம் இலக்கிய ஆசிரியனின் சிந்தனைத் திறனுக்கு ஏற்ப வேறுபடுகிறது. வடிவமைதி அவனது வெளியிடும் ஆற்ற (Power of Expression) லுக்கேற்ப வேறுபடுகிறது

இலக்கியத்தின் உள்ளடக்கம் என்பது அரிசி என்றால் உருவம் என்பது அதனைப் பலகாரச் சமைக்குந் திறன்.

இலக்கியங்கள் உள்ளடக்கத்தாலும் புகழ்பெறும்; உருவத்தாலும் புகழ்பெறும். இரண்டின் சிறப்பாலும் புகழ்பெறும்.

படைப்பாளியின் பக்குவம்

இலக்கியப் படைப்பாளியின் கல்வியின் அகலம், அறிவின் ஆழம், சிந்தனைத் திறன், உலக அனுபவம், சமுதாய உணர்ச்சி, சமூக நோக்கு ஆகிய இவற்றைப் பொறுத்து இலக்கியத்தின் உள்ளடக்கம் சிறப்பையும், செம்மையினையும் பெறும்.

கல்வியறிவின்றி இலக்கியம் படைக்க இயலாது. ஆனால் கல்வியறிவு மட்டுமே இலக்கியம் படைக்கப் போதாது.

கல்விக்கூடங்களில் சொல்லித்தரப்படும் சில தகவல்களையும், தரப்படும் சில பயிற்சிகளையுமே கல்வி என்ற சொல்லால் நாம் குறிப்பிடுகிறோம். அந்தப் பொருளிலேயே நான் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறேன்.

கல்வியறிவு மட்டுமே உடையவன் சில தகவல்களை மட்டுமே திரல்படத் தரமுடியும். தஞ்சைப் பெரியகோவில் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது என்று எழுதினால் அது வரலாற்றுத் தகவலே தவிர அதில் இலக்கியப் பண்பு இல்லை.

'மண்ணளந்த புகழையும், வானளக்கும் கோபுரத்தையும் பெற்ற தஞ்சைப் பெரியகோவில்... ..." எழுதிக்கொண்டு போனால் அதற்கொரு இலக்கிய மணம் கூட்டப்படுவதை நாம் உணர முடிகிறது.

அதுபோலவே அறிவாற்றல் மட்டுமே உடையவனாலும் இலக்கியம் படைக்க இயலாது. வெற்றறிவு இயந்திர மயமானது. ஐந்தும் நான்கும் ஒன்பது என்றறிவது, அறிவு

இவ்வறிவு விஞ்ஞானத்திற்கும், தொழில் நுட்பத்திற்கும் பயன் படுமளவு இலக்கியத்திற்குப் பயன்படாது

விஞ்ஞான அறிவும், தொழில் நுட்ப அறிவும் மட்டுமே உடைய கலையுணர்வு இல்லாத சிலர்க்கு இலக்கியம் அர்த்த மற்றதாகக் (Nonsense) கூடப் படுகிறது; அவ்வாறே சொல்லவும் செய்கிறுர்கள்.

சிந்தனைத் திறன் மட்டுமே இலக்கியம் படைக்க உதவிவே தில்லை. படிப்பற்ற சிந்தனை நிலத்தில் தூவப்படாத விதையைப் போல விளைவின்றி, பயனின்றிப் போய்விடும். கல்வியறிவற்ற வெற்று, வறட்டுச் சிந்தனையிலிருந்து உருப்படியான எதுவும் வெளிவராது.

"Study without thought is vain.
Thought without study is perilious"

என்ற ஆங்கிலப் பொன்மொழி இதற்கோர் சுருக்கமான விளக் கத்தை யளிக்கிறது படிப்பற்ற சிந்தனை; பயங்கரமான முடிவு களுக்குக்கூட இட்டுச் செல்லக்கூடிய அபாயமுடையதுதான்.

உலக அனுபவம் அற்றவன் படைக்கும் இலக்கியத்தில் உயிரோட்டம் இருப்பதில்லை. சமையல் செய்வது எப்படி என்ற நூலைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே சமைக்கப்பட்ட உண வைப்போல் அது சுவையின்றி அமையும் குழாயில் தண்ணீர் கொட்டுவதைப் பார்த்த அனுபவத்தை மட்டும் வைத்துக் கொண்டு குற்றால அருவிபற்றிக் கவிதை எழுத முற்படுபவன் செயலாக அது அமையும்.

சமுதாய உணர்ச்சி

சமுதாய உணர்ச்சி - பிரக்ஞை - (Social Conciousness) இலக்கிய ஆசிரியனுக்கு மிக இன்றியமையாதது உலக அனுபவம் என்பது சொந்த அனுபவத்தைக் குறிப்பது. சமுதாய உணர்ச்சி என்பது தன்னைச்சுற்றி வாழும் சமூகத்தின் உணர்வுகளை உள்ளவாறே உணர்ந்து அதனைத் தன் எழுத்தில் வடிக்க விரும்பும் உள்ளத்தின் உந்தலைக் குறிப்பது

தன்னைச் சுற்றி என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை அறியாதவனும். அல்லது அதைப்பற்றிக் கவலைப் படாதவனும் தான் வாழும் சமுதாயத்தின் உயர்வு தாழ்வு

குறித்து உள நெகிழ்ச்சி அடையாதவனும் இலக்கியம் படைக்க இயலாது. இலக்கியப் படைப்பாளிக்கு நெகிழ்ச்சியடையும் நெஞ்சுமட்டும் போதாது, சமுதாயத்தைப் பற்றிய ஒரு விமர்சனப் பார்வையும் வேண்டும்.

சமூக உணர்ச்சியுடைய எழுத்தாளர்களே தான் வாழும் காலத்தின் தேவையை எளிதாக உணர்வர்.

காற்று மண்டலத்தின் வெப்பத்தையும், குளிர்ச்சியையும் நம் உடல் தானே உணர்வதுபோல் சமூக உணர்ச்சியுடைய எழுத்தாளனது உள்ளம் காலத்தின் தேவையைத் தானே உணரும்.

பாரதி வாழ்ந்த காலத்தில் பாரதியைவிடப் பெரும் புலவர்களும், கவிஞர்களும் இருந்தார்கள். தத்தம் படைப்புக்களை வெளியிட்டார்கள் இருந்தபோதிலும் பாரதிப் பாடல்கள் சிறப்புற்றமைக்குக் காரணம் அவை காலத்தின் தேவையை நிறைவுசெய்தமைதான். பாரதியின் சமூக உணர்ச்சிதான் அவனை அவ்வாறு பாடவைத்தது.

தான் வாழும் தாயகம் அடிமைப்பட்டிருக்கும்போது. தனது நாடும், மொழியும் அந்நிய ஆட்சியில் அவமானப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு எழுத்தாளனுக்கு தன் எழுத்தாணியால் அந்த அவமானத்தைத் துடைக்க முற்படுவதுதான் முதல் கடமையாக இருக்கமுடியும், அதனால் சிறையும், தூக்கு மேடையும் வரலாம், அதைப்பற்றி இலக்கியப் படைப்பாளி கவலைப்பட்டுக்கொண்டிருக்கமுடியாது. அவ்வாறு கவலைப் பட்டால் அவனது எழுத்தைப்பற்றிச் சமுதாயமும் கவலைப் படாது.

தமிழ்த்தாய் 'சுதந்திரம்' என்ற ஆடை இல்லாதிருந்த போது தமிழ்க் கவிஞர்கள் பலர் அவளது அழகைப்பற்றி மட்டுமே வியந்து பாடி அவளை அவமானப்படுத்திக்கொண்டிருந்தார்கள் பாரதி மட்டுமே அவளுக்கு ஆடையாகிய சுதந்திரமே முதல் தேவை என்பதை உணர்ந்து கவி பாடினான். ஆகவே அவன் போற்றப்படுகிறான். அவனது பாடல்கள் சாகாவரம் பெற்று விளங்குகின்றன. எண்ணிக்கையில் மிகக் குறைந்த பாடல்களையே பாடியிருந்தும் வள்ளுவர், இளங்கோ, கம்பர் என்ற வரிசையில் இடம் பெற்று விளங்குகிறான்.,

இலக்கிய ஆசிரியனின் சமூக உணர்ச்சி அவனது எழுத்துக்களுக்குத் தனியான வலுவைத் தருகின்றன என்பதற்கு மேலும் பல எடுத்துக் காட்டுக்களைத் தரமுடியும்.

சமண சமயத்திற்கு எதிரியாக சைவம் போர்க் கொடி உயர்த்தும் சூழ்நிலை வந்தபோது இலக்கியம் தன் பொறுப்பை நிறைவேற்றியது. அதன் விளைவுதான் தேவாரப் பாடல்கள். தேவாரப் பாடல்களிலும் அப்பர், சம்பந்தர் பாடல்கள் அவற்றிற்கு மிகச் சரியான எடுத்துக் காட்டுக்கள் ஆகவே அவை சைவ உலகத்தில் செல்வாக்கு பெற்றன.

சைவத்திற்கு எதிராக வைணவம் போராடியபோது தோன்றியவை ஆழ்வார் பாசுரங்கள். அவை வைணவ உலகத்தில் வாழுந்தன்மையைப் பெற்றுவிட்டன.

சமயச் சண்டைகட்கு ஒரு முடிவு கட்டிவைக்காவிட்டால் சமயமே வாழ்விழந்துவிடும்; உலோகாயதமே வாழ்வுபெறும் என்ற நிலைவந்த சென்ற நூற்றுண்டில் வள்ளலார் தோன்றினர். சமரச சன்மார்க்கத்திற்குக் குரல் கொடுத்தார் ஆகவேதான் சென்ற நூற்றுண்டில் அவரைவிட எண்ணிக்கையிலும், கவித்துவத்திலும் விஞ்சிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பாடல்களைவிட வள்ளலார் பாடல்கள் செல்வாக்குப்பெற்று வாழுந்தன்மை பெற்றுவிட்டன.

சமூகப் பார்வை

சமூக உணர்ச்சிக்கும் சமூக நோக்குக்கும் சிறிது வேறுபாடு உண்டு.

சமூக நோக்கு என்பது தனி மனிதன் சமுதாயத்தின் ஓர் உறுப்பு என்பதை, சமூகத்தின் ஒட்டுமொத்தமான நலன்களில் தான் தனி மனிதனின் நலன் அடங்கிக் கிடக்கிறது என்பதை முழுமையாகப் புரிந்து எழுதுவது; செயல்படுவது.

ஒரு சமூகச் சிக்கலைத் தனி மனித நோக்கில் பார்த்து எழுதுவதற்கும், சமூக நோக்கில் பார்த்து எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு.

விபசாரம் ஒரு சமூக நோய். இரண்டாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டில் இருந்து வரும் நோய். இதனைத் தனிமனித நோக்கில் பார்ப்பவர்கள் இதன் தீர்வுக்கு அறிவுரைகளையே நம்புவர். சமூக நோக்கில் பார்ப்பவர்கள் சமூக ஏற்றத் தாழ்வையே பொறுப்பாக்குவர். சமய நோக்கில் பார்ப்பவர் அது அவரவர் தலைவிதி என ஆறுதல் பெறுவர்.

சமூக நோக்கு ஒவ்வொரு இலக்கிய ஆசிரியனுக்கும் உண்டு. அதில் வெவ்வேறு போக்குகள் இருந்தே தீரும்.

இலக்கிய ஆசிரியரின் சமூக நோக்கைப் பொறுத்து அதன் உள்ளடக்கம் வேறுபட்ட சிறப்புக்களைப் பெறும்.

பெண்கள் தாமே உணரும் அறிவற்றவர்கள் என்று பரிமேலழகர் எழுதியமைக்கும், ''பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்'' என்று பாரதி பாடியமைக்கும் அவர்களது புலமை வேறுபாடுகள் காரண மன்று. அவர்களது சமூக நோக்கில் எழுந்த வேறுபட்ட நிலைகளே அடிப்படைக் காரணம்

சுருங்கக் கூறின் இலக்கிய உள்ளடக்கத்தின் சிறப்பு என்பது அதனை ஆக்கியவனின் சிந்தனைச் சிறப்புதான். அது பிறப்பால் வருவது என்பர் சமயஞ் சார்ந்தோர் இயற்கையான ஆற்றல்கள் இருந்தபோதிலும் படிப்பாலும், பயிற்சியாலுமே அது சிறப்படைகிறது என்பது அறிவியல் கருத்து.

எது எவ்வாறாயினும். சொன்னதையே சொல்லிக்கொண் டிருக்கும் கிளிப்பிள்ளைகள் ஆசிரியப் பணிக்கேற்றவர்களாக இருக்கலாம். அவர்களால் இலக்கியம் படைக்க இயலாது. சுயசிந்தனை உடையவர்கள் மட்டுமே இலக்கியம் படைக்க இயலும். எனவேதான் பழைய இலக்கண, இலக்கியப் பயிற்சி பெற்ற புலவர்கள் ஏராளமாக இருந்தபோதிலும் படைப்பிலக்கிய கர்த்தாக்களின் தொகை குறைவாக இருக்கிறது.

இலக்கண, இலக்கியப் பயிற்சிகளைக் கல்வி நிலையங்களால் எளிதில் உண்டாக்கமுடியும். புதிய இலக்கியம் படைப்பது எவ்வாறு என்பதைக் கற்றுத்தரப் பாடத் திட்டமும் இல்லை; பல்கலைக் கழகமும் இல்லை.

வடிவச் சிறப்பு

வடிவமைதி அல்லது நயமில்லாத நூல்களில் எத்தகைய உயர்ந்த கருத்துக்கள் இருப்பினும் அவை மக்களிடம் செல்வாக்குப் பெறுவதில்லை,

இனிமையாகப் பேசுபவனை எல்லோரும் கவனிப்பதுபோல நயமாகச் சொல்லப்பட்ட கருத்துக்களையே மக்கள் காது கொடுத்துக் கேட்பர். "நயம்பட" உரை என்று கூறிய ஔவை இலக்கியத்தின் ஆற்றல் அறிந்தவரே.

நயம்படச் சொல்லும் ஆற்றலால்தான் பற்பொடி வியாபாரியும், பாம்பாட்டியுங்கூடத் தெருவில் கூட்டம் சேர்த்து விட முடிகிறது.

நயம்படச் சொல்வதால்தான் அலுப்புத்தட்டும் புராணச் சொற்பொழிவுகளில் கூடக் கூட்டம் நிரம்பி வழிகிறது.

நயம்படப் பேசுவதால்தான் உள்ளீடற்ற அரசியல்வாதிகள் கூட பெருந் தலைவர்களாக மாறிவிட முடிகிறது. அத்தகையவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கே உரியவர்களல்லர். எல்லாக் கட்சியிலும் அத்தகையவர்கள் உண்டு.

இலக்கியம் உள்ளடக்கத்தாலும் சிறப்படையும்; உருவத்தாலும் சிறப்படையும். தமிழிலக்கியத்தில் அதில் நிறைய எடுத்துக்காட்டுகள் உண்டு

நாலடியார் போன்ற அறநூல்கள் கருத்தாழம் மிக்க தன் உள்ளடக்கத்தால் மட்டுமே சிறப்புடையவை.

குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு முதலியவை அரிய கருத்துக்களை அருகியே உடையன எனினும் உருவ அழகால் சிறப்புற்று விளங்குகின்றன.

அகநானூறு, குறுந்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம். கம்பராமாயணம் முதலியன இரண்டாலும் சிறப்புடையவை.

வாழுந்தன்மை

ஆகவே, உள்ளடக்கச் சிறப்பும். வடிவமைதியும் ஒருங்கே பெற்ற படைப்புக்களே காலவெள்ளத்தில் எதிர்நீச்சலடித்து வாழுந்தன்மை பெறுகின்றன.

மற்றபடி எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான கருத்துக் களைச் சொல்லிவிட்டதனுல் இலக்கியம் வாழுந்தன்மைபெறுகிறது என்ற கருத்து, உணர்வு (Sentiments) பற்றி எழுந்ததேயன்றி அறிவுபற்றி எழுந்ததன்று.

பக்தி இலக்கியங்களையே பெரிதுபடுத்திப் பேசுவோர் இறை யுணர்வுதான் நிலையானதாகவும், அதனைப் பேசும் இலக்கியங் களே எக்காலமும் வாழுந்தன்மை பெறுகின்றன என்றும் சாதிப்பர்.

சமயஞ் சாராத இறையுணர்வுபற்றி மட்டுமே பேசும் பக்தி இலக்கியங்கள் இல்லை. சமயம் தன் செல்வாக்கை இழந்துவரும் புதிய உலகில் சமய இலக்கியங்கள் போற்றப்படமாட்டா.

ஆகவே, எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான நூல்களை யாரும், எந்தக் காலத்திலும். எந்த மொழியிலும் எழுதிவிட வில்லை. ஏனெனில், இவ்வுலகில் எல்லாமே மாறிக்கொண் டிருக்கும் இயல்புடையவை.

உயிருள்ளது வளரும்; வளர்வது மாறும். உயிருள்ள மனிதனேடு தொடர்புடைய இலக்கியம் மட்டும் உயிரற்ற சடப் பொருளா என்ன?

உ

இயற்கைப் புலவர் கம்பர்

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை

(ஆனி மாத இதழ் தொடர்ச்சி)

இயற்கைப் பொருளைப்பற்றிக் கூறும்போது கம்பர், கேட் போர்க்கு இன்பம்பயக்குமாறு தம் கருத்தை உவமை மூலம் அழகுபடத் தெளிவாகவும் விளக்கமாகவும் உரைப்பர். அவ் வாறு கருதப்பெறும் பொருளைக் கூறும்போது அதனுள் அமைந்த உயரிய தன்மையினை, கண்முன் காணப்பெறும் பொருளோடு ஒப்புமையாகக் கொண்டு சிறந்துயர்ந்த குறிப்பு தோன்ற உவமம் செய்தல் வேண்டுமென்பது இலக்கண மரபு. கம்பர் பிறவியில் இயற்கைப் புலவராதலால் இம்மரபிற்கும் அப்பாற்பட்டவராய் விளங்கினர். விண்ணகத்துத் துன்பமற்ற இன்பத்தைத் தன் கவிச்சோலையில் கம்பர் அமைத்து. அளவில் மகிழ்வை யளிக்கும் அச்சோலையின் இன்ப வளத்தை அணி யிலக்கணத்தோடு கூடிய கற்பனையழகில் திகழும்படி நாட்டி, உம்பர்நாட்டை விட இம்பர் சோலைக்கே உயர்வும் கொடுத்துள் ளார் இத்தகையவாறு உயர்த்தும் கொள்கையும், உள்ளக் கருத்தும்

நண்ணிய நல்குந்தெய்வக்கடி நறுஞ்சோலை ஞால
மெண்ணிய வின்பமன்றித் துன்பங்க ளில்லையான
புண்ணியம் புரிந்தோர் வைகுந்துறக்கமே போன்றதன்றே

* * *

நாகமு நரந்தக்காவு நளினவாவிகளு நண்ணிப்
போக பூமியையுமேசும் மலர்ச்சோலை'

என்றது போன்ற கம்பரது வாக்குகளால் நனி புலனாகுதல் காண்க. சிந்திக்கின் விண்ணகத்தில் கற்பகமரங்கள் ஓரைந்தே யுளதாயிருக்கும்போது மண்ணகத்தில் அவைகளைவிட சாலச் சிறந்த பல்மரங்கள், ஊழி பெயர்ந்தாலும் பெயராது, வண் மையில் மிகுந்து, பொன், வெள்ளியொடு நன்மணிகளொப்பத் திகழ்ந்தன என கம்பர்,

'மாணிக்கம் பனசம்வாழை மரகதம், வயிரந்தேமா
'வாணிப் பொன்வேங்கை கோங்க மரவிந்தராகம் பூகஞ்

கம்பர் தன் கவி மலர்ச் சோலையை மகளிராடும் அரங்காக அமைத்து நாட்டியக் கலையுணர்ச்சியினையும்; நாட்டியத்திற்குரிய பின்னணிப் பாட்டுக் கலைப் பண்பையும் விளக்கியுள்ளார். கம்பரது சோலையைக் குறிப்பாக அழகு செய்வன குயிலும், மயிலும், தும்பிகளுமே. இவைகளைக்கொண்டு கம்பர். தன் கலையின்பச் சோலையில் ஆடல் பாடலின்பத்தை வழங்கி. ஆடலும் பாடலும் அமைய வேண்டிய அத்தனை பண்புகளையும், இயற்கைப் பொருள்களில் கண்டு களிக்குமாறு தெள்ளத் தெளியக் காட்டியுள்ளார். சோலையை ஆடகவரங்காகக் கொண்டு ஆங்கு மயில் தோகை விரித்து நடன மகளிர்போன்று ஆடுவதை அசோக மலராகிய விளக்கொளியில் காட்டி, மலராகிய யாழில் வண்டு ஒலிசெய்து பாடுவதை. சோலையின் நீர் நிலையிலுள்ள மதகாகிய தண்ணுமையினைத் தகவுறத் தழுவும் படிக் கீழ்க்கண்ட பாடலில் கம்பர் அமைத்து வைத்த வகை. அமிழ்தினைச் சுவைசெய்தன்ன, அழகினுக்கு அழகு கொடுத்ததை மானும்.

வரம்பில்லான் சிறைமதகு கண்முழ வொலிவழங்க
வரும்புநாண் மலரசோகங் களலர் விளக்கெடுப்பப்
நரம்பினுன்ற தேன்குரை கொணறு மலர்யாழிற்
சுரும்பு பாண்செயத் தோகைநின் ருடுவசோலை

ஈண்டு கம்பரின் ஏற்றமிகு கற்பனை அறிவிற்கு இப்பாட்டு விருந்தான வருணனையாக அமைந்துள்ளதைக் கண்டுகொள்க.

சோலையின்கண் இயல்பாய் நிகழும் நிகழ்ச்சிகளை நிலைக் களனுகக் கொண்டு, கம்பர், கோசல நாட்டின் வளப்பத்தைக் காட்டும் முயற்சியில். நீர் நிலையினருகில் அமைந்த இயற்கைச் சோலையினை ஓர் நாடக அரங்காக ஆக்கி. ஆடலரங்கிற்குரிய விளக்குகளையும் படைத்துவிடுகிருர். இயற்கை நலனை, கருத் திற்கு அழகு கொடுக்கும் கற்பனைத் திறனுல் மாற்றி, மருதநில மங்கையை இயற்கை அரசியாக அத்தாணி மண்டபத்தே அமரச்செய்து, ஆடலும் பாடலும் நடைபெற பக்க இசைக் கருவிகளையும் முறையாக அமைத்துள்ளார். தாமரைக் கொடி கள், விளக்குகளைத் தாங்கி நிற்கும் மகளிரைப் போன்று, கூப்பிய

மலர்களைத் தாங்கி நிற்க, முகில்கள் முழவு அதிர்வதுபோல் மெல்லிய முழக்கம் செய்து நிற்க. தெளிந்த அலைகள் திரைச் சீலையைக் காட்ட, மகர யாழில் எழும் ஓசை போன்று வண்டுகள் இன்னிசையுடன் ரீங்காரம் செய்து பாடிக்கொண்டிருக்க, கரிய மேகங்களைக் கண்டு இடியின் இனிய குமுறல்களைக் கேட்ட மயில்கள், சேலையைப் பிடித்துக்கொண்டு விரித்தாடும் மகளிரே போன்று தோகைகளை விரித்தாடின. இவ்வாடல் பாடலைக் கண்டு களித்துக் கேட்க, குவளைக் கொடிகள் உள்ளன. இக் குவளைக் கொடிகள் போன்று, பார்ப்பவர்கள், மலராகிய கண்களால் விழித்து நோக்கிய வண்ணம் இருந்தனர். மருதத்திணை அரசி, இக் காட்சியினைக் கண்டு களித்து மாண்புடன் கொலு வீற்றிருக்கிருள். இவ்வாறு கம்பர் விளக்கமுறத் தரும் இக் காட்சியை அவரது பாடலில் காண்குவம்.

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின்ஏங்கக் குவளைகண் விழித்துநோக்கத்
தெண்டிரை எழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும்மாதோ

கூர்ந்து நோக்கிய இயற்கைக் காட்சிகளைப் பாவில் கம்பர் அமைத்த திறம், படிக்குந்தோறும் நம் மனக்கண்முன் வந்து நின்று உவகையின்பத்தை மிகுவிக்கின்றதோடமையாது. கலையறிவில் கனிந்து விளைந்த கவியின்பத்தையும் அளிக்கின்றது. உயர்ந்த எண்ண எழுச்சியாலும், உள்ளத்து உணர்ச்சியாலும் கற்டனைச் செல்வம் பெற்ற கவியுள்ளம்தான், இவ்வாறு உணர்த்த இயலும்.

மக்கள் வாழ்க்கை இயற்கை நலனையுடையதாதல்பற்றி. இயற்கைப் படைப்பில் மக்கள் வாழ்வியலை எழிலுறப் படம் பிடித்துக் காட்டும் கல்வியறிவு மிக்காராய கம்பர், ஐந்திணைப் பாற்படும் இயற்கைப் பொருள்களை மக்கள் நன்கு பயின்றும் ஐந்திணை நெறியளாவியும் தெளிதல் வேண்டுமென தன் கருத்துக்கும் இன்னேசைக்கும் இசைந்த சொற்களின் வழி இயற்கையினை இனிது புலப்படுத்துவாராயினர். இயற்கைப் பொருள்களைத் தெளிந்து நுகர்தலில்லையேல். இன்பம் பொங்கும் வாழ்க்கை இல்லையென்பதும். இயற்கைப் பொருள்களோடு பயின்று வரும்போது அகனுணர்வு ஆழ்ந்து தெளியும் புலமைக்கியைந்த கலை நலமே மக்களுக்கு இன்றியமையாததென்பதும் கம்பரது கருத்துக்களாகும். அதனுனே, இயற்கையை

கம்பர் மக்களினின்றும் பிரித்துக் கூறாது இயற்கைப்பொருள் களையும் மக்களின் உணர்வுகளையும் இயற்கையில் இழைந்து நெகிழுமாறு பொருந்தவைத்து, மொழிக்கு மொழி இனிக்கும் வகையில் இயற்கையழகை இருக்கும் வண்ணம், தம் மனோ பாவத்திற்கிசைந்த உவமைகள் வழி உரைத்தும், இருக்க வேண்டியவாறு புகன்றும், இயற்கையை மக்களது உளப்பான் மையுடன் ஒன்றவைத்துள்ளார். இவ்வாறு செய்யுங்காலையிலும், கம்பர், இயற்கைக்கு முரணாகாதவாறு இயற்கை நிகழ்ச்சிகளை யும் தற்குறிப்பேற்றம் வழி இன்சுவைகனிய சிறிது புனைந்து ரைத்து, தம நுண்ணறிவினை, நமக்குத் திறம்பட விளக்கிக் காட்டும் பான்மை பெரு மகிழ்ச்சியளிக்க வல்லதாயிருக்கிறது. மற்றும் இயற்கைப் பொருள்களில் வாழ்க்கை யனுபவத்தின் இன்பத்தைக் கனிவுகொண்டு கண்டு, கம்பர், இயற்கையின் இன்பமயமாய அமைதி நிலையில் ஒன்றி நிற்கும் இயல்புடைய ராய், தமது அரிய அனுபவத்தையும், உள்ளம் விழையுமாறு அமையும் கற்பனை வளத்தோடு கலந்த உண்மைகளையும், உள் ளுநர் அறிவுக்கும் அனுபவத்திற்குமேற்ப கலைப்பண்புடன் அழகு வடிவாக ஆர்வமொடு உணர்த்தியுள்ளார்.

மங்கலப் பண் முழங்கும் வாழ்க்கை செய்தற்கு கருவியாக நம்மெதிரில் இயற்கைப் பொருள்கள் அமைந்துள்ளன. அத ணுன் அவைகளை நன்கு பயின்றாழ்ந்து தெளியப் பெற்றால், அவை எண்ணியதை எண்ணரிய வாங்கு கொடுக்கும் கற்பகத் தன்மையுடையன. கற்பகத்தில் பெறுவனவற்றை யெல்லாம், இயற்கையில் தோய்ந்துள்ள அழகுப் பொருள்களை இனிதுற மூகந்து கண்டு உய்த்துணர்ந்த கம்பரது எண்ணற்ற பாக் களில் பெறலாகும். இயற்கை தன் வயத்திற்கு கம்பரை அழைத்து இழுக்க, அவர் உலக இயற்கைகளை நன்கணம் ஆய்ந்து முடிவுகட்டி வாழ்க்கைத் துறைகளில் வெற்றியும் விளக் கமும் கொள்ள. இயற்கைக்குரிய சீரிய கருத்துக்களை கற்பனை களின் அற்புதத்துடன், கம்பர், தன் கலைப்போக்கில் ஏற்ற முறையில் விளங்குமாறு எடுத்துரைத்துள்ளார். இதனுன் இவ ரது பாக்களை ஆய்ந்து கற்கக் கற்க நாவூறு மென்பதில் ஐயமில்லை. எனவே இயற்கையைப் பற்றி சொல்லோவியத்தில் தன்னுள்ளத்தினையும் வரைந்து, எண்ணியதை யாவும் எண் ணியபடியே கவிவடிவில் திண்ணமாகக் கொடுக்கும் கல்வியிற் பெரிய கம்பர் கற்பக மனைய இயற்கைக் கவிஞரே யாவரென்பது உன்னுதற்குரியது.

தமிழ் வாழ்க

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

36-ஆம் ஆண்டுத் தொடக்க விழா

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 36ஆம் ஆண்டுத் தொடக்க விழா திருவள்ளுவ ராண்டு 2005 ஆடித் திங்கள் 8ஆம் நாள் (24—7—74) புதன் கிழமை மாலை 4 மணி அளவில் சங்கத் தமிழ்ப்பெரு மன்றத்தில் நடைபெற்றது விழாவிற்குத் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், எம் ஏ, அவர்கள் தலைமை யேற்றுச் சிறப்பித்தார்கள்.

கடவுள் வாழ்த்துடன் விழா இனிது தொடங்கியது. கல்லூரி முதல்வர் திருமிகு புலவர் பி. விருத்தாசலம், எம் ஏ,. அவர்கள் தலைவர் அவர்களையும் விழாவுக்கு வருகைதந்த தமிழ்ச் சான்றோர் களையும் வரவேற்றுப் பேசினார்கள். விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசிய தலைவர் அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத் துடன் தமக்குள்ள தொடர்பினை முதற்கண் எடுத்துக் கூறிக் "கால்டுவெல் செய்த தமிழ்த் தொண்டு" என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் சொற் பொழிவின் சுருக்கம் வருமாறு :

"உலகில் உள்ள உயர் தனிச் செம்மொழிகளுள் தமிழ் தலையாயது என்பதை முதன்முதல் உலகிற்கு எடுத்துக் கூறியவர் இராபர்ட் கால்டுவெல் அவர்களே ஆவர். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கருதி வாழும் இனம் தமிழ் இனமே என்பதைத் திராவிட மொழிகளை இந்தோ ஐரோப்பிய மொழிகளுடனும். சித்திய மொழிகளுடனும் ஒப்பிட்டு ஆய்ந்ததன் மூலம் வெளிப்படுத்திய கால்டுவெல் அவர்கள் தமிழ் பிறமொழித் தாக்குதலால் வீழாது என்று கூறியுள்ளாரேனும் ஒன்றாக இருந்த தமிழ் ஆரிய மொழித் தாக்குதலால் திராவிட மொழிகளாகச் சிதைவடைய நேரிட்டது என்பதை உணர்ந்து தமிழர்கள் விழிப்போடு வாழ வேண்டும்" பின் இளங்கோவடிகள் கழகச் செயலாளர் செ. இராமகிருட்டினன் நன்றி கூற சங்க வாழ்த்தும் நாட்டு வாழ்த்தும் பாடப்பெற்று விழா இனிதே முடிவுற்றது.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி,

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை – 2.

மாணவர் இலக்கிய மன்ற

34-ஆம் யாண்டுத் தொடக்க விழா

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களுள் ஒன்றாகிய உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளியின் மாணவர் இலக்கியமன்ற 34-ஆம் யாண்டுத் தொடக்க விழா, திருவள்ளுவராண்டு 2005 ஆடித்திங்கள் 24-ஆம் நாள் (9—8—74) வெள்ளிக்கிழமை மாலை 4-மணியளவில் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. நா. பாலசுப்பிரமணியன், B.A., B.T., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். விழாவுக்குத் தலைமை தாங்கிய தஞ்சை, உட்கோட்ட நீதி மன்ற நடுவர் திரு. N மோகன்தாஸ் M.A., B L., அவர்கள் தம் தலைமையுரையில், "இளமைப் பருவத்தில் — படிக்கும் காலத்தில் நன்றாக உழைத்துப் படித்துத் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கள்தான் வாழ்க்கையிலும் வெற்றி கண்டிருக்கிறார்கள். அவ்வாறு உழைத்தவர்களுக்குத் தான் எதிர்காலம் நன்மையாகவும் — இன்பமாகவும் அமைந்துள்ளது" என்று கூறினார்கள். "எதிர் காலம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய புதுக்கோட்டை, மன்னர் அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் திரு சாமி தியாகராசன், M.A., B O.L., அவர்கள் தம் உரையில், 'மாணவர்கள் உடல்வளத்தையும் அறிவு வளத்தையும் பெருக்கி நல்ல பழக்கங்களாலும் வழக்கங்களாலும் எதிர்காலம் தங்கள் கையகத்துள் இருக்குமாறு அமைத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்கள். தமிழாசிரியர் திரு மீ. இராமதாசன் அவர்கள் நன்றி நவில, நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நடைபெற்றது

---

158 ஆம் பக்க தொடர்ச்சி

வடமொழிப் பற்று மிகுந்த தமிழ் இலக்கணம் வல்லாராகிய நல்லார், 'சங்கக் காலம்' என எழுதியுள்ளனர்.

தமிழ்ப் புணர்ச்சி இலக்கணத்தை மொழி வரலாற்று முறையான,

> பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையினானே

என்பது போன்ற விதிகட் குட்படுத்தலாகாது.

சங்கக் காலமே, சங்க காலமன்று

ஆபிரகாம் அருளப்பன்,
13, தானியேல் தாமசு தெரு, திருநெல்வேலி-2.

நம் செந்தமிழ் மொழியில் சொற்களின் முதலில் வரும் வல்லெழுத்துக்கள் கசதப என்னும் நான்குமே. இம்மொழிகள் வன்முதல் மொழிகள் எனப்படும். புணர்நிலையில் அகர வுயிர் ஈருகும் மொழி நிறுத்த சொல்லாக குறித்துவரு கிளவி க, ச, த, ப முதலில் வரும் மொழி யாகும்போது,

> அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
> வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்
> றத்த மொத்த வொற்றிடை மிகுமே
> (தொல். உ. ம. ல் – 1)

என்னும் விதியின்படி, விளக்குறிது, விளச் சிறிது, விளப் பெரிது விளத்தீது என அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலாகிய வல்லெழுத்து மிகுந்து முடியும்.

> மகர விறுதி வேற்றுமை யாயிற்
> றுவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே
> (தொல். பு. ம=ல் 15)

வேற்றுமைப் புணர்ச்சியெனின், நிலைமொழி யீருகும் மகர மெய் முழுவதும் குன்றி (அகர வுயிர் விதியீருகி) வருமொழி முதலாகும் வல்லெழுத்து மிகுந்து அம்மொழிகள் புணரும்.

(எ-டு): மரம் + கிளை = மரக்கிளை, குளம் + சார்பு = குளச் சார்பு. குணம் + தோன்றல் = குணத் தோன்றல். குலம் + பெருமை = குலப் பெருமை.

இவ்வாறே 'சங்கம்' என்பது நிலைமொழி யாகவும், காலம், சான்ரோர், தமிழ், பாடல் போனற வன்முதல் மொழி குறித்து வருகிளவியாகவும், நிலைமொழி யீற்று மகர மெய் கெட்டு 'சங்க', என நின்றும் வருமொழி முதல் வல்லெழுத்து மிக்கும், சங்கக் காலம், சங்கச் சான்ரோர், சங்கத் தமிழ், சங்கப் பாடல் என அமைய வேண்டுமன்ரோ?

அகர வீறே யன்றி, மற்றுப் பெரும்பாலும் ஏனை உயிரீறுகளின் முன்னரும், வருமொழி முதல் வல்லெழுத்து மிக்குப் புணர்நிலை அமையும்

இவ்வகைப் புணர்ச்சி விதிகளைக் காண்க:

> ஆகார விறுதி அகர வியற்றே (உ, ம ல். 19)
> உகர விறுதி அகர வியற்றே (,, 52)
> ஈகார விறுதி ஆகார வியற்றே (,, 47)
> ஊகார விறுதி ஆகார வியற்றே (,, 62)
> ஏகார விறுதி ஊகார வியற்றே (,, 72)
> ஓகார விறுதி ஏகார வியற்றே (,, 87)
> வேற்றுமைக் கண்ணும்
> அதனோ ரற்றே (,, 14, 23, 50, 57, 64, 74, 90)

இன்ன விதிகளைக் கருத்திற் கொண்டே பவணந்தி முனிவர்,

> 'இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன்
> கசதப மிகும் விதவாதன மன்னே (168)

என நன்னூலில் சுருங்கச் சொல்லுகிருர்.

கசதப முதலாகும் மொழிகள் வருமொழி யாகும்போது, இயல்பாகப் புணரும் அகர வீற்று மொழிகளைப் பின்வரும் நூற்பா காட்டுகிறது ;

அன்ன வென்னும் உவமக் கிளவியு
மண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியுஞ்
செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லு
மேவல் கண்ணிய வியங்கோட் கிளவியுஞ்
செய்த வென்னும் பெயரெஞ்சு கிளவியுஞ்
செய்யிய வென்னும் வினையெஞ்சு கிளவியு
மம்ம வென்னு முரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை யுளப்பட
வன்றி யனைத்து மியல்பென மொழிப.

(தொல் உ, ம—ல். 8)

இவ்வாருகவும், தமிழ் இலக்கணத்தோடு இலக்கியமும் அறிந்தோர் பலர் 'சங்க காலம்' எனப் பிழையாக எழுதுகின்றனரே! இதற்குக் காரணம் இளமைக் கல்வி சிலையிலெழுத்தென உள்ளத்துப் பதிந்ததாகலாம் சிலர், ஆதி பகவன்' போல வடமொழிச் சந்தி யென்பர். * தமிழில் எழுதப்படும் மொழிகள் தமிழ் இலக்கண விதி பெறுதலே முறையாகும்.

தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சிக்காலத்தின்போது சமசுகிருதமாகிய வடமொழி நல்லமைப்புற்று வாழ்ந்து சிறப் படைந்தது. ஆட்சிமொழித் தகுதியான உயர்நிலையும் போற்றுதலும் பெற்றது. அம்மொழி யறிஞர் கூறியவற்றை யெல்லாம் தமிழ்ப் புலவர்கள் பொன்னே போலப் போற்றுவாராயினர். ஸ. ஜ. ஷ. க்ஷ. ஹ என்னும் வடவெழுத்துக்களையும் தமிழ் மொழி நெடுங்கணக்குடன் இணைத்துக்கொண்டனர் தெய்வம், தேயம், நீர், மீன், ஆதி, பகுதி, காலம் முதலிய செந்தமிழ்ச் சொற்களும் வடமொழியினின்று வந்தனவாக ஏற்றுக்கொள்ளப் பட்டன.

காலம் வடசொல்லெனின், சங்கம் + காலம் = சங்க காலம் என வருமொழி முதல் வல்லெழுத்து மிகாமல் நிற்கலாம்.

அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய
புணரிய னிலையிடை யுணரத் தோன்ரு

(தொல், கு புல். 77).

இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியும் மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே. (நன். 239)

என்னும் நூற்பாக்களை அப்புணர்ச்சிக்கு விதியாகக் காட்டலாம்.

'காலம்' வடசொல்லா? காற்று, காலை, காலம். கான்று என்னும் சொற்களுக்கெல்லாம் 'கால்' என்னும் செந்தமிழ் வினையடியே பகுதியாகும். கால் = அம் = காலம் எனப் பெயராகும். ஞால் + அம் = ஞாலம் நிலை + அம் = நிலையம் போன்றன அத்தகையன,

'கால்' என்பதற்கு வெளியிடு, வெளிப்படு, இயங்கு என்று பொருள். ஐ விகுதி பெற்றுக் 'காலை'யென நின்று பொதுவாகக் காலம், நேரம், பொழுது என்னும் பொருளையும், சிறப்பாக இரவுக்குப் பின் வெளிப்படும் முதல் ஒளி நேரமாகிய விடியற் பொழுதையும் உணர்த்தும் றுவ் விகுதி பெற்று, வாயு

இயங்கும் நிலையில் கால் + று = காற்று எனப்படும். தேர். சகடம் முதலியன இயங்குதற்குத் துணையாகும் உறுப்பு தேர்க் கால், சகடக்கால் எனப்படும். மக்களும் மாக்களும் இயங்கு தற்குத் துணையாகும் உறுப்பும் கால் எனப்பட்டது. (நான்கில் ஒரு பாகம் கால் என்பது முதற் பொருளன்று. வழிப் பொரு ளாகும்) அவ்வகைச் சொற்கள் முதனிலைத் தொழிலாகு பெயர் எனப்படும்.

அழல் கான்று (அகம் - 387 புறம் - 398) நிலவுக் கான்று (அகம் - 122) — 'கான்று' என இறந்தகால வினையெச்சம் வந் துள்ளது: கால் - பகுதி, ற் - இறந்த கால விடை நிலை. உ - வினையெச்ச விகுதி. புணர்நிலையில் நிலைமொழி யீற்று லகர மெய் வருமெழுத்தாகிய றகரத்தோடு மயங்காது ஆதலின் அதன் இன மெல்லொற்றாகியது.

தொல்காப்பியத்தில் 54 இடங்களில் காலம் என்னுஞ் சொல் ஆளப்பட்டுள்ளது தோன்றிக் காலமொடு (686), வாராக் காலமும் (920), முந்நிலைக் காலமும் (725), ஏனைக் காலமும் (733), என முறையே வினையெச்சத் தொடரிலும். பெயரெச்சத் தொடரிலும், வேற்றுமைத் தொடரிலும், இடைச் சொற்றொட ரிலும் தமிழ் மொழிப் புணர்ச்சி விதிகட் கிணங்கக் காலமாகிய வருமொழி முதல் மிகுந்து முடிந்துள்ளமை காண்க.

முதலாம் திருக்குறளில் வரும் 'ஆதி பகவன்' என்ற தொடர், இருபெயரொட்டுப் பண்புத் தொகை, வடநூன் முடிவு; ஆதலால் வலி மிகவில்லை', என்பர். சான்றோர் இலக்கியங் களில் வரும் தமிழ்ச் சொற்றொடர் தமிழ் மொழி இலக்கணம் பெறுதலன்றி வடமொழி இலக்கணம் பெறுதலில்லை.

உயிரீ றாகிய வுயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப. (தொகைமரபு 11);
வேற்றுமை யல்வழி இஐ யென்னும்
ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைய
அவைதாம்
இயல்பாகுநவும் வல்லெழுத்து மிகுநவு
முறழா குநவு மென்மனார் புலவர். (தொகைமரபு 16)

என்னும் விதிகட்கேற்ப அத்தொடர் இயல்புப் புணர்ச்சியாயிற்று.

'ஆதி' வடசொல்லன்று 'ஆ' என்னும் செந்தமிழ் வினை யடியே பகுதி. தி - தொழிற் பெயர் விகுதி; தொழிலாகு பெயராய்த் தொடக்கம் உணர்த்தியது 'பகவன்' என்பதும் தமிழ்ச் சொல்லே பகல், பகுதி, பகை என்பவற்றுக்குப் போல, பகு - பகுதி, அ - சாரியை. வ் - பெயரிடை நிலை, அன் - விகுதி; பகவன் - வகுத்தான், பால்வரை தெய்வம் என்பது பொருள்.

காலம் என்னும் கிளவி, கால் என்னும் வினையடியாகப் பிறந்த செந்தமிழ் மொழியே யென்பதும், தமிழ்ப் புணர்ச்சி யிலக்கணம் அமைய நிற்றலும், தொல்காப்பியம் முதலாக வரும் நூல் ஆட்சியால் மெய்ப்பிக்கப்படுகிறது. எனவே, அது வேறு ககர முதன் மொழிகள் போலவே புணர்ச்சி யிலக்கணம் பெற வேண்டும். காலம் என்னுங் கிளவிக்கெனச் சிறப்பு விதி யாதொன்றும் இல்லையே.

(155 ஆம் பக்கம் பார்க்க)